துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.6.2025) தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் உள்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் திட்டத்தை முன் மாதிரியாகப் பின்பற்றி

ஒன்றிய அரசின் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுமுறை காலத்தை நீட்டித்திடுக!

ஒன்றிய அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன் 17 - வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள் ஒன்றிய அரசு பணியாளர் நலத் துறை மற்றும் ஓய்வூதியப் பயன்கள் துறையின் துணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திராசிங் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மத்திய அரசு பெண் ஊழியர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 180 நாட்கள் அதாவது 6 மாத கால மகப்பேறு விடுமுறைக் காலத்தை ஒரு ஆண்டாக நீட்டித்து ஆணை வெளியிடும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு தமிழக அரசுப்பணியில் உள்ள பெண் ஊழியர்களுக்கு சமீபத்தில் மகப்பேறு விடுமுறைக் காலத்தை 6 மாதங்களில் இருந்து ஒரு ஆண்டாக அதிகரித்து ஆணையிட்டுள்ளது. தமிழக அரசின் இத் துணிச்சலான திட்டம் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. தமிழக அரசின் இந்த முன்மாதிரி திட்டம், பெண் அரசு ஊழியர்களுக்கு பிரசவ காலத்தில் ஏற்படும் உடல் நலப் பிரச்சினைகளுக்கு உதவக்கூடிய வகையிலும் அவர்கள் குழந்தைகளின் நலத்துக்கும் உதவியாக அமைந்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் கூட பெண் ஊழியர்களுக்குப் போதுமான பிரசவகால விடுமுறை வழங்குவது அவர்கள் உடல் நலத்தைக் காக்க உதவுவதுடன் குழந்தைகளுக்குக் குறைந்த பட்சம் 6 மாத காலமாவது தாய்ப்பால் கொடுக்க வழி ஏற்படும். இதனால் தாய்மார்களின் நலனும், குழந்தைகளின் ஆரோக்கியமும் காக்கப்படும் என்று கூறியுள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசின் திட்டத்தை முன்மாதிரியாகப் பின்பற்றி ஒன்றிய அரசின் பெண் ஊழியர்களுக்கும் ஒரு ஆண்டு மகப்பேறு விடுமுறை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க கேட்டுக் கொள்கின்றேன் என்று கூறியுள்ளார்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. அவர்கள் அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

கார் பருவ சாகுபடிக்காக நாங்குநேரி - கொடிமுடியாற்றிலிருந்து தண்ணீர்!

சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்!

நெல்லை, ஜூன் 17 – நெல்லை மாவட்டம் நாங்குநேரி வட்டம் கொடுமுடியாறு நீர்த்தேக்கத்திலிருந்து கார் பருவ சாகுபடிக்காக தண்ணீர் திறக்கும் நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்ததாவது:

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டு விவசாயிகளுக்கு பல்வேறு நலன் சார்ந்த திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி முதலமைச்சர் அவர்கள் உத்தரவுக் கிணங்க கொடுமுடி ஆறு நீர்த்தேக்கத்திலிருந்து நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்டங்களில் உள்ள வள்ளியூரான்கால்,படலையார்கால் மற்றும் ஆத்துக்கால் ஆகிவற்றின் மூலம் பாசனம் பெறும் 2548.94 ஏக்கர் பாசன நிலங்களுக்கு கார் பருவ சாகுபடிக்காக 13.06.2025 முதல் 10.10.2025 வரை நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 50 கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விடவும், அணைக்கு கூடுதல் நீர்வரத்து இருக்கும் பட்சத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்ட 2548.94 ஏக்கர் நிலங்களின் குறைந்தபட்ச தேவைக்கு கூடுதலாக உள்ள நீரினை, வடமலையான்கால் மூலம் பாசனம் பெறும் 3231.97 ஏக்கர் நிலங்களுக்கு நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 100 கன அடி வீதம் நீர் வரத்து மற்றும் இருப்பை பொருத்து தேவைக்கேற்ப தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் எதிர்வரும் நாட்களில் பருவ மழை பொய்த்து எதிர்பார்க்கின்ற நீர் வரத்து கிடைக்கப் பெறவில்லை என்றால், இருக்கும் நீரை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும் எனவும், நீரை சிக்கனமாக பயன்படுத்தவும் நீர் வினியோக பணியில் நீர்வளத்துறைக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கண்காணிப்பு பொறியாளர் சிவக்குமார்,செயற் பொறியாளர் மணிகண்டன், திருக்குறுங்குடி வனச்சரக அலுவலர் யோகேஸ்வரன், சேரன்மகாதேவி கோட்டாட்சியர் (பொ) சிவகாமசுந்தரி, களக்காடு நகராட்சி துணைத் தலைவர் ராஜன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர்,நாங்குநேரி வட்டாட்சியர் பாலகிருஷ்ணன்,உதவி பொறியாளர் பாஸ்கர் மற்றும் அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள்,விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.